[1970 மார்ச் 23

மதுரையில் டிராக்டர் பணிக்களரி

* 492 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் விவசாய டிராக்டர் வொர்க்ஷாப் எப்போது கட்ட ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) அதற்கான கருவிகள் எவ்வளவு ரூபாய்க்கு எப்போது வாங்கப்பட்டன ?

(உ) அந்த வொர்க்ஷாப் விவசாய இலாகாவிடம் எப்போது ஒப்படைக்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவணிமுத்து:

(அ) மதுரையில் டிராக்டர் பணிக்களரி கட்டும் பணி 2-8-1967-ம் நாளன்று பொதுப்பணித்துறையினரால் தொடங்கப்பட்டது.

(இ) 1,98,236 ரூபாய் மொத்தச் செலவில் 1968 மார்ச் திங்களில் தேவையான இயந்திரங்கள் வாங்கப்பட்டன.

(உ) 1969 ஜூன் திங்களில்தான் பொதுப்பணித் துறையினர் வேளாண்மைத் துறையினரிடம் பணிக்களரிக் கட்டிடத்தை ஒப்படைத்தனர்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணியை ஆரம்பித்து ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. டிராக்டர்கள் பழுது பார்ப்பதிலே சிரமங்கள் ஏற்படுகின்றன. காலதாமதம் ஆவதற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? இதற்குத் தேவையான கருவிகள் எல்லாம் வாங்கப்பட்டுவிட்டனவா ? வாங்கப்பட்டு விட்டது என்றால் எவ்வளவு வாங்கப்பட்டு இருக்கிறது. இன்னும் வாங்கப்படவில்லையென்றால், எப்பொழுது வாங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இவையெல்லாம் சென்டேஜ் கட்டணம் நீங்கலாக 2.40 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு 1966–67-லே இதற்கு ஏற்பு அளிக்கப்பட்டது. 1967-68 மேலும் இயந்திரங்கள் வாங்குவதற்காக 2 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வாங்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் முடிவடைந்து பொதுப்பணியிடமிருந்து விவசாய உதவிப் பொறியாளரிடம் விடப்பட்டிருக்கிறது. 13-4-1970 முதல் இந்தப் பணிக்களரிக் கட்டும் பணி செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: மதுரையிலே இருக்கின்ற ஒர்க்ஷாப் மாதிரி தமிழகத்திலே எத்தனை இருக்கிறது. இல்லையென்றால், இனிமேலாவது ஒவ்வொரு மாவட்டத்திற்கும்

1970 மார்ச் 23]

டிராக்டர்கள் அதிகம் தேவைப்படுகின்றன என்ற காரணத்தினால் ஆங்காங்கு சிறிய சிறிய ஓர்க்ஷாப்புகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்பொழுது சென்னையிலே ஒன்று இருக்கிறது. இதைத்தவிர கோயம்புத்தூர், திருவாரூர் ஆகிய இரண்டு இடங்களிலும் பணிக்களரிகள் இருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்மூலம் மேலும் நான்கு நிறுவவேண்டுமென்று திட்ட மிடப்பட்டிருக்கிறது. அதிலே வேலூர், திருச்சி ஆகிய இடங் களில் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் 1969-ம் ஆண்டு ஜூலையில் மேலும் இரண்டு இடங்களில் ஏற்படுத்த வேண்டுமென்று பரிசீலித்து எந்த எந்த இடங்களில் ஏற்படுத்த லாம் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 4 பணிக் களரிகள் நம்மு டைய மாநிலத்திலே ஏற்பட இருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த ஓர்க்ஷாப் மூலம் ஆண்டொன்றுக்கு எத்தனை டிராக்டர்கள் செய்யப்படும்? இதைத் தவிர, மற்ற விவசாயக் கருவிகளும் இதிலே செய்யப்படுகின்றனவா? விவசாயிகளுக்கு என்ன முறையிலே அவற்றை விநியோகிப்பதற்கு அரசு பரிசீலித்துவருகிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஓர்க் ஷாப்பிலே ரிப்பேர் செய்யக்கூடிய பணிகள்தான் நடக்கின்றனவே தவிர புதிய டிராக்டர்கள் கட்டுவதில்லை. புதிய டிராக்டர்கள் செய்யக்கூடியது சென்னையில் இருக்கிறது. டிராக்டர்கள் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கப்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து 4 அல்லது 5 தமிழகத்திலே ஆரம்பிக்கப்பட இருக்கிறோம் என்று சொன்னார்கள். டிராக்டர்களின் தேவை அதிகமாக இருப்பதாலே அதிகமாக டிராக்டர்களை வாங்கிப்பயன்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டு வருவதாலே, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து சிறப்புத் திட்டம் ஒன்று போட்டு, மாவட்டத்திற்கு ஒன்று அல்லது தாலுகாவிற்கு ஒன்று என்ற முறையிலே இவற்றை ஆரம்பிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதை உணர்ந்துதான் அரசாங்கம் நான்கு பணிக்களரிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. நிதிநிலைமைகளைப் பொறுத்து அதிகமாக ஓர்க்ஷாப்புகள் ஏற்படுத்துவது என்பது கவனிக்கப்படுகிறது.